# ஆகஸ்ட் - 24 - வியாழன்

## திருச்சீடர் புனித பார்த்தோலோமியு

## "இதைவிட பெரியவற்றைக் காண்பீர்கள்" (யோவா. 1:50)

## முதல் வாசகம் : திருவெளிப்பாடு 21 : 9 – 14

இறுதியான அந்த ஏழு வாதைகள் நிறைந்த ஏழு கிண்ணங்களைக் கொண்டிருந்த ஏழு வானதூதர்களுள் ஒருவர் வந்து, "வா, ஆட்டுக்குட்டி மணந்துகொண்ட மணமகளை உனக்குக் காட்டுவேன்" என்று என்னிடம் கூறினார்.தூய ஆவி என்னை ஆட்கொள்ளவே, அந்த வானதூதர் ஒரு பெரிய, உயர்ந்த மலைக்கு என்னைக் கொண்டுசென்றார் திருநகரான எருசலேம் கடவுளிடமிருந்து விண்ணகத்தை விட்டு இறங்கிவருவதை எனக்குக் காட்டினார்.அதில் கடவுளின் மாட்சி விளங்கிற்று விலையுயர்ந்த கல்போன்றும் படிகக்கல்போன்றும் அதன் ஒளி பளிங்கெனத் துலங்கியது.அதைச்சுற்றி பெரிய, உயர்ந்த மதிலும் அதில் பன்னிரண்டு வாயில்களும் இருந்தன. வாயில்களுக்குப் பொறுப்பாய்ப் பன்னிரண்டு வானதூதர்கள் நின்றார்கள். இஸ்ரயேல் மக்களுடைய பன்னிரண்டு குலங்களின் பெயர்களும் அவ்வாயில் களில் பொறிக்கப்பட்டிருந்தன.கிழக்கே மூன்றும் வடக்கே மூன்றும் தெற்கே மூன்றும் மேற்கே மூன்றுமாக அவை அமைந்திருந்தன.நகரின் மதில் பன்னிரண்டு அடிக்கற்களைக் கொண்டிருந்தது. அவற்றில் ஆட்டுக் குட்டியின் பன்னிரண்டு திருத்தூதர்களின் பெயர்களும் எழுதப்பட்டிருந்தன.

**பதில்பாடல் :** ஆண்வரே உம் அன்பர்கள் உமதரசின் மாட்சியை அறிவிப்பார்கள்

## நற்செய்தி : யோவான்1 : 45 – 51

அக்காலத்தில் பிலிப்பு நத்தனியேலைப் போய்ப் பார்த்து, இறைவாக்கினர்களும் திருச்சட்ட நூலில் மோசேயும் குறிப்பிட்டுள்ளவரை நாங்கள் கண்டுகொண்டோம். நாசரேத்தைச் சேர்ந்த யோசேப்பின் மகன் இயேசுவே அவர்" என்றார்.அதற்கு நத்தனியேல், "நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வர முடியுமோ?" என்று கேட்டார். பிலிப்பு அவரிடம், "வந்து பாரும்" என்று கூறினார்.நத்தனியேல் தம்மிடம் வருவதை இயேசு கண்டு, "இவர் உண்மையான இஸ்ரயேலர், கபடற்றவர்" என்று அவரைக் குறித்துக் கூறினார்.நத்தனியேல், "என்னை உமக்கு எப்படித் தெரியும்?" என்று அவரிடம் கேட்டார். இயேசு, "பிலிப்பு உம்மைக் கூப்பிடுவதற்கு முன்பு நீர் அத்திமரத்தின்கீழ் இருந்த போதே நான் உம்மைக் கண்டேன்" என்று பதிலளித்தார்.நத்தனியேல் அவரைப் பார்த்து, "ரபி, நீர் இறை மகன் நீரே இஸ்ரயேல் மக்களின் அரசர்" என்றார்.அதற்கு இயேசு, "உம்மை அத்திமரத்தின்கீழ் கண்டேன் என்று உம்மிடம் சொன்னதாலா நம்புகிறீர்? இதைவிடப் பெரியவற்றைக் காண்பீர்" என்றார்.மேலும் "வானம் திறந்திருப்பதையும் கடவுளின் தூதர்கள் மானிடமகன்மீது ஏறுவதையும் இறங்குவதையும் காண்பீர்கள் என மிக உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்று அவரிடம் கூறினார்.

**தியானம்:** இன்று அப்போஸ்தலரான புனித பார்த்தலேமேயுவின் திருநாள். இவரே நற்செய்தியில் நத்தனியேல் என்று அழைக்கப்பட்டவர், இவரையே பிலிப்பு யேசுவிடம் அழைத்து வந்து அறிமுகம் செய்து வைத்தவர். நத்தனியேல் தம்மிடம் வருவதைக் கண்ட இயேசு "இவர் உண்மையான இஸ்ராயேலர், கபடற்றவர்" யோவா.1:47) என்று சொன்னதும் ரபி நீர் இறைமகன், நீரே இஸ்ராயேலின் அரசர்! என்று கூறி இயேசுவை இனங்கண்டு கொள்கின்றார். இறைபணியில் தன்னையும் இணைத்துக் கொள்கின்றார். இன்றைய முதல் வாசகத்திலும் பன்னிரண்டு திருத்தூதருக்கும் அளிக்கப்பட்டுள்ள தனித்துவமான இடத்தையும் நாம் காண்கின்றோம். இவர்கள் இயேசுவாலே தெரிவுசெய்யப்பட்டவர்கள். அவரது பணியில் பங்கேற்றவர்கள் அவரது மரணத்திற்கும், உயிர்ப்புக்கும் சாட்சிகள். நாமும் பெயர் சொல்லி அழைக்கப்பட்டுள்ளோம். அந்த அழைப்பின் மகத்துவத்தை உணர்ந்து வாழ்கின்றோமா? எமது அர்ப்பணிப்பிலும், சீடத்துவத்திலும் திருத்தூர்களது முன்மாதிரிகை காணப்படுகின்றதா? எம் நல் வாழ்வால் இறைமகன் இயேசுவை நீரே உலகிற்கெல்லாம் அரசர் என்று அறிக்கையிடுவோம். அவரது வல்லமையில் நம்பிக்கை வைத்து அவரது அழைப்பை ஏற்றுக்கொள்வோம்.